## முசலி பிரதேச சபை

## மன்னார் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 27 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்ரம்பர் 11 இல் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து முசலி பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடு

நேர்முன்னைய ஆண்டில் குடிநீர்ச் சேவைக் கட்டணம் அறவிடும் ஊழியரின் கவனக்குறைவின் காரணமாக சபைக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 91,500 நிதிக்கூற்றுக்களில் முற்றாக விடுபட்டிருந்தது.

#### 1.3.3 இணக்கம் காணப்படாத வேறுபாடுகள்

31 திசெம்பர் 2017 இல் இருந்தவாறான காசும் காசுக்கு சமனானவைகளும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 3,604,168 ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய ஐந்தொகையில் ரூபா 3,600,168 ஆகக் காட்டப்பட்டிருந்தமை தொடர்பில் ரூபா 4,000 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.4 இணங்காமை**

-----------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைததுவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

-----------------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | ----------------------------------- | --------- | ----------------- |
| (அ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக விதிகள் | | |
| (i) | விதி 178(3) | - | திறமையான ஒப்பந்த வேலைகளைச் செய்கின்ற சமூகமட்ட அமைப்புக்கள், சனசமூக நிலையங்களின் விபரங்களைக் கொண்ட பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 218 | - | காணிகள் கட்டடங்கள் யாவும் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு முறை செயலாளரினால் சோதனை செய்விக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் | | |
| | நிதி ஒழுங்குவிதி 371 | 286,610 | பல்வேறு செயற்பாடுகளுக்காக சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் வெளித் தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்த முற்பணம் கடந்த 01 தொடக்கம் 19 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

------------------

**2.1 நிதிசார் விளைவுகள்**

-----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 4,738,377 தொகையான மீண்டுவரும்

செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 1,957,197 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வாடகைகள் | 3,200,000 | - | 2,038,341 | 1,372,171 | 14,930,100 | - | 11,768,598 | 1,544,160 |
| (ii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 240,000 | - | 421,100 | - | 1,401,650 | - | 1,518,317 | - |
| (iii) | ஏனைய வருமானம் | 3,776,530 | - | 4,498,983 | 3,431,884 | 3,787,500 | - | 4,716,014 | 5,444,855 |

### 2.2.2 வாடகைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாகன வாடகை நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 126,800 அறவிடப்பட்டிருக்க கடந்த இரண்டு வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 13 குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்த குத்தகை வாடகைகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,238,924 இனை அறவீடு செய்வதற்கு கடந்த 01 தொடக்கம் 07 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதமசெயலாளரிடமிருந்து ரூபா 21,470 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 2,170,383 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு
------------------------------

3.1 செயலாற்றல்
----------------

திண்மக்கழிவு முகாமைத்துவம்
--------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) சுகாதார தொழிலாளர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(v) கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவு முறைமையொன்று பேணப்படவில்லை.

(vi) திண்மக் கழிவுகள் மீள் சுழற்சிக்குட்படுத்தாது காணப்படுவதுடன் சூழல் பாதிப்படையக்கூடியவாறு தீ மூட்டி எரிக்கப்பட்டிருந்தன.

(vii) திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக இடைக்கால சட்டமொன்று இயற்றப்பட்டிருக்கவில்லை.

(viii) சபையினால் கழிவு முகாமைத்துவத்திற்காக செலவாகும் கிரயத்தினை திரட்டிக்கொள்வதற்காக குப்பைவரி அறவிடப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்
----------------------------------------------

சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த 11 வாகனங்களிற்கு வாகன விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர் மற்றும் சாரதியின் கவனயீனத்தின் காரணமாக ஏற்பட்டதண்டம் ரூபா 7,775 சபை நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்
---------------------------------------------------

4.1 உள்ளகக் கணக்காய்வு
-----------------------------

சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளகக் கணக்குப் பரிசோதனைகளால் ஏற்படுத்தப்பட்டிருந்த பரிந்துரைகள், விதந்துரைப்புக்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு
------------------------

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டுக்கும் உண்மைக்குமிடையிலான செலவின வேறுபாடு ரூபா 1,104,677 ஆல் பாதகமாகக் காணப்படுகின்றது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | பிரதான பேரேடு முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | வருமானங்கள் | ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து ஆதனவரி அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |